
# Lanka Women e-Market

# பயனர் வழிகாட்டி

https://lankawomenemarket.gov.lk




Lanka Women e-Market இணைப்பின் https://lankawomenemarket.gov.lk ஊடாக நிகழ்நிலை வலையமைப்பில் நுழைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

## ➢ "Lanka Women e-Market" என்றால் என்ன?

### பெண் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை நிகழ்நிலை வலைதளத்தின் ஊடாக மேம்படுத்துவதற்காக வெளியிடும் டிஜிட்டல் சந்தை வலைதளமாகும்


மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சினால் தொழில்முயற்சியான்மையுடைய பெண்களின் வாழ்க்கைத் தரத்தினைக் கட்டியெழுப்புதல் மற்றும் அவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நோக்கில் உருவாக்கியுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி தொழில் முயற்சியான்மையுடைய பெண்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை இணையத்தின் ஊடாக மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இணைய மென்பொருள் "Lanka Women e-Market" எனப்படும்.


அதன் ஊடாக தொழில்முயற்சியான்மையுடைய பெண்களின் சந்தைவாய்ப்புகளை விரிவாக்குவதற்கும் அவர்களின் உற்பத்திகளையும் சேவைகளையும் உள்நாட்டில் போன்று சர்வதேச சந்தையிலும் மேம்படுத்தவதற்காகவும் பிரச்சாரம் செய்வதற்காகவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த Lanka Women e-Market வலையமைப்பினைப் பாவிக்கின்ற முறை பற்றிய அறிவுறுத்தல் தொடர் இங்கு உள்ளடங்கியுள்ளது.

- **Lanka Women e-Market வலையமைப்பில் தொழில்முயற்சியான்மையுடைய பெண்களைப் பதிவுசெய்யும் முறை**

✓ Lanka Women e-Market **வலையமைப்பின் முகப்புப் பக்கத்தின்** (Home Page) **மேலேயுள்ள** Download Registration Form **ஊடாக அல்லது** [http://www.childwomenmin.gov.lk/services/lanka-women-e-market](http://www.childwomenmin.gov.lk/services/lanka-women-e-market) **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் இணைய வலையமைப்பின் ஊடாக வலையமைப்புக்காக விற்பனையாளர்களைப் பதிவுசெய்யும் விண்ணப்பப்படிவத்தை சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் பதிவிறக்கம் செய்யலாம்.**







✓ **மேற்படி விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்திய பிற்பாடு ஸ்கேன்** (Scan) **பண்ணி** mwca.itunit@gmail.com **மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

✓ **அத்துடன்** Lanka Women e-Market **வலையமைப்பின் முகப்புப் பக்கத்தின் மேலேயுள்ள** Become a Seller **இற்குள் நுழைந்து** Vendor Register **பக்கத்தின் ஊடாக முயற்சியான்மையுடைய பெண்களின் தகவல்களை உட்படுத்தி பதிவுசெய்தல் வேண்டும்.**

✓ **அங்கே,** " * " **அடையாளமிடப்பட்டுள்ள சகல விடயங்களையும் பூரணப்படுத்துதல் வேண்டும். அங்கு நீங்கள் ஈடுபடுத்துகின்ற பயனர் பெயர்** (User Name) **மற்றும் கடவுச் சொல்லைப்** (Password) **பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.**




- ✓ மேற்படி கட்டங்களை மேற்கொண்ட பிற்பாடு தங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்காக இந்த வலையமைப்பில் பதிவுசெய்வதற்காக அமைச்சின் உத்தியோகத்தர்களின் அனுமதியைப் பெற்றுக்கொடுக்கப்படும். உங்களுடைய பதிவுசெய்தலின்போது குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கீழ்வருமாறு email ஒன்று கிடைத்த பிற்பாடு உங்களுடைய Lanka Women e-Market கணக்கில் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

## Your Lanka Women E-market Account is Activated.


## Thank You For Joining With Us!

Thank you for joining with Lanka Women E-market


Log Here

- Lanka Women e-Market வலையமைப்பில் பதிவுசெய்த தொழில்முயற்சியான்மையுடைய பெண்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வலையமைப்பில் உட்படுத்தும் முறை


✓ Lanka Women e-Market வலையமைப்பின் முகப்புப் பக்கத்தின் (Home Page) மேலேயுள்ள Become a Seller இற்குள் நுழைந்து அங்கே காணும் Vendor Login பக்கத்தின் நீல நிற பகுதியில் நீங்கள் ஆரம்பத்தில் பதிவுசெய்கின்றபோது ஈடுபடுத்திய பயனர் பெயர் (User Name) மற்றும் கடவுச் சொல்லைப் (Password) உட்படுத்தி தங்களுடைய கணக்கில் நுழைய முடியும்.





✓ அப்போது Lanka Women e-Market வலையமைப்பில் தங்களுடைய பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள கணக்கில் நுழையலாம்.




- ✓ **அங்கே** Products **பட்டியல் ஊடாக தங்களுடைய உற்பத்திகள் / சேவைகள் வலையமைப்பில் உட்செல்லும் இடத்திற்குள் நுழையலாம்.**





- ✓ அந்தப் பக்கத்தின் வலது பக்கத்தில் உள்ள நீல நிற "+" க்ளிக் செய்து திறக்கப்படும் Add New Product பக்கத்தின் ஊடாக தங்களுடைய உற்பத்திகள் / சேவைகள் வலையமைப்பில் உட்செல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.



- ✓ **அங்கே தங்களுடைய உற்பத்திகள் / சேவைகளின் விபரங்கள் மற்றும் அவற்றின் தெளிவான புகைப்படங்களை வலையமைப்பில் உட்படுத்துதல் வேண்டும். அதேபோல அந்தப் புகைப்படங்களில் ஒரு புகைப்படத்தின் அளவு 400KB இற்கு குறைந்திருத்தல் வேண்டும்.**

- ✓ **அங்கே நீங்கள் வலையமைப்பில் உட்படுத்திய உற்பத்திகள் / சேவைகளை அமைச்சின் உத்தியோகத்தர்களின் அனுமதியைப் பெற்ற பிற்பாடு வலையமைப்பு தெரியும்.**




➢ Lanka Women e-Market **வலையமைப்பின் பாவனையில் உங்களுக்கு சிக்கல்கள் இருப்பின் 011-3463096 தொடர்புகொள்ளவும்.**